# பத்திரிக்கை செய்தி

## புதிய பாருக்கு அனுமதி வழங்க லஞ்சம் ரூ.1,00,000/- கேட்டு பெற்ற டாஸ்மாக் மாவட்ட மேலாளர் / துணை ஆட்சியர் மற்றும் அவரது வான ஓட்டுநர் ஆகியோர் கைது

புகார்தாரர் திரு.தானு, சென்னை மாவட்டம், முகப்பேர் மேற்கு, ஸ்ரீதேவி அடுக்குமாடி குடியுருப்பில் வசித்து வருகிறார். இவர் வேப்பம்பட்டு, காக்கலூர் மற்றும் திருத்தனி ரோட்டில் ஏற்கனவே பார் நடத்தி வருகிறார். புகார்தாரர் திருவள்ளுர் மாவட்டம் போலிவாக்கத்தில் புதிதாக பார் தொடங்க அனுமதி கேட்டும் ஏற்கனவே உள்ள பார்களை தொடர்ந்து செயல்படுத்தவும் அனுமதி கேட்டு துணை ஆட்சியர் அலுவலகத்தில் மனு விண்ணப்பித்திருந்தார். மனுவை பரிசீலனை செய்து அனுமதி அளிக்க திரு. கலைமன்னன், மாவட்ட மேலாளர் / துணை ஆட்சியர், திருவள்ளுர் மேற்கு, டாஸ்மாக், திருவள்ளுர் மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.1,00,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை திருவள்ளுர் பிரிவில் புகார் மனு ஒன்று அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 03.03.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு. கலைமன்னன், மாவட்ட மேலாளர் / துணை ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் திரு.சங்கர், வாகன ஓட்டுநர், அவர்கள் லஞ்ச பணமான ரூ.1,00,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

## PRESS NOTE

## TASMAC DISTRICT MANAGER / DEPUTY COLLECTOR AND HIS DRIVER ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE Rs.1,00,000/- FOR PERMITTING NEW BAR

The complainant Tr.Dhanu, is residing at Mugappair West, Chennai District and he is running three bars at Veppampattu, Kakkalur and Thiruthani road. The complainant had applied for new bar permission at Polivakkam, Thiruvallur district and also applied for permission to continuing existing bars at the office of the District Manager / Deputy Collector. Tr.Kalaimannan, District Manager / Deputy Collector, Thiruvallur West, TASMAC, Thiruvallur District demanded Rs.1,00,000/- as bribe for processing his application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Thiruvallur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 03.03.2023, on the direction of Tr.Kalaimannan, District Manager / Deputy Collector, Tr.Sankar, Driver of District Manager / Deputy Collector received the bribe amount of Rs.1,00,000/- from the complainant. Both accused were arrested.